VOLUME: 1
ISSUE: 1
ISSN: xxxx-xxxx
Jul - Sep 2018

KAMARAJ JOURNAL OF ACADEMIC RESEARCH

An International, Online, Open Access, Peer Reviewed, Multi-disciplinary Journal

**Subject:**

**TAMIL**

**Title of Original Research Paper:**

# கொத்தாளி கிராம அம்மன் வழிபாடு

**Author:**

**திருமதி. மு. செல்வி, உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.**

**Assistant Professor, Kamaraj College, Thoothukudi – 628 003, Affiliated to Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli – 627 012, Tamil Nadu, India.**

## முன்னுரை:

தூத்துக்குடி மாவட்டத்தில் ஒன்றான கயத்தாறு வட்டாரத்தில் ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தின் ஒரு பகுதியாகக் கயத்தாறுக்குக் கிழக்கே 10கி.மீ தொலைவில் கொத்தாளி கிராமம் அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு 84133.500 சதுர அடியாகும். 2010–2011ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இக்கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 1470. பல இன மக்களும் ஒற்றுமையுடனும், மனமகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட கோயில்கள் உள்ளன. இக்கிராமத்திலுள்ள மாரி, காளி அம்மன் கோயில்களின் தலவரலாறையும், வழிபாட்டு முறைகளையும் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## கொத்தாளி பெயர்க்காரணம்:

கயத்தாறை அரசாண்டவர் வெட்டும் பெருமாள் என்ற குலசேகரப் பெருமாள் ஆவார். இவர் வேட்டைக்குச் சென்று பல விலங்குகளை வேட்டையாடி மகிழ்பவராதலின் இப்பெயர் பெற்றார். இவர் வேட்டைக்காக ஜகந்நாதபுரம் சென்றார். அங்கு செல்லியாரம்மன் கோயிலுக்குத் தென்புறம் ஒரு ஊரணி இருந்தது. அவ்வூரில் முள்ளம்பன்றி ஒன்று யாரிடமும் அகப்படாமல் சுதந்திரமாக

உலவிக் கொண்டு இருந்தது. மன்னர் அதைப் பிடிக்க முயன்றும் முடியாததன் காரணமாக ஊரணிக் கரையில் உள்ள மரத்து நிழலில் தங்கி, சற்று நேரம் இளைப்பாறினார். பின்னர் ஊர் திரும்பினார். தான் மறந்து வைத்துவிட்டு வந்த வாளை எடுத்து வருமாறு தன் பணியாட்களை ஏவினார். அவர்கள் வாளை எங்கு தேடியும் காணாது ஊர் திரும்பினர். ஜகந்நாதபுரத்தை ஆண்டு வந்த மன்னன் கொற்றவன் ஆவார். ஊரணிக்குப் பாதுகாப்பாக இருந்தவன் வாளை ஊரணியில் போட்டதை மன்னர் அறியவில்லை. ஜகந்நாதபுர மன்னரே தனது வாளை ஒளித்து வைத்துக் கொண்டார் என்று அவர்மேல் சந்தேகம் கொண்டார். அதனால் அம்மன்னரை "கொற்றவன் வாள் ஒளி" என்று அழைத்தார். ஜகந்நாதபுரம் என்று அழைக்கப்பட்ட இவ்வூர் கொற்றவன் எனும் மன்னன் பெயரால் "கொற்றவன் வாள் ஒளி" என்று அழைக்கப்பட்டு காலப்போக்கில் கொத்தாளி என மருவியது என்பதை கள ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது. "மன்னன் கொற்கை என்ற பட்டம் பெற்று கொற்கையாளி என அழைக்கப்பட்டு கொத்தாளி என்று மருவி வழங்கப்பட்டிருக்கலாம்" என்று எழுத்தாளர் செ.மா.கணபதியின் பேட்டியின் மூலம் அறியமுடிகிறது.

**அம்மன் கோயில் தலவரலாறு:**

கண்ணநல்லூர் மாரி என்றழைக்கப்படும் அம்மன் 'கண்ண நல்லூர்' எனும் ஊரிலிருந்து வந்ததாகப் புராணம் கூறுகிறது. இந்த அம்மன் வடதிசையிலிருந்து காளி, கூளி, காலவராயன். காத்தவராயனுடன் தென்திசை நோக்கி பயணம் செய்தான். திருச்சி, திண்டுக்கல், மதுரை, ஸ்ரீவல்லிபுத்தூர், சங்கரன் கோயில், தென்காசி, திருநெல்வேலி போன்ற ஊர்களில் உள்ள இறைவனின் தலங்களில் தங்கி இறையருள் பெற்றாள். பின் அந்த அம்மன் அக்காள் தங்கை எட்டு பேராகக் கயத்தாருக்கு அருகில் உள்ள கொத்தாளி கிராமத்துக்குச் சென்றதாகப் பழங்கதை ஒன்று கூறுகிறது. அக்காள் தங்கை எட்டு பேராக இருப்பவர்கள் சந்திமரிச்சம்மன், முப்பிடாதி அம்மன், முத்துமாரி, மாரியம்மன், அக்கினி மாரி. சந்தனமாரி. காளியம்மன், பத்திரகாளி என்போர் ஆவர்.

அம்மன்கள் எட்டுபேரும் கொத்தாளியில் 'கொயிலப் பணிக்கர்' என்பவரின் இல்லத்திற்குச் சென்று நடுச்சாமத்தில் வீட்டுக் கதவைத் தட்டினர். அவர் வெளியே வந்ததும் அவருக்கு அருள் கொடுத்து மறைந்தனர். அவர் அன்று முதல் எட்டுநாள் அன்ன ஆகாரமின்றி இறையருளுடன் ஆடிக்கொண்டே இருந்தார். ஊர் மக்கள் அருள்வாக்கு கேட்க அவர் 'கண்ண நல்லூரிலிருந்து மாரியும், காளியும் வந்திருக்கேன். என்னை வைத்து வணங்குங்கள். இது அம்மனுடைய வாக்கு' என்று கூறினார். கொத்தாளி ஊருக்கு வடக்கில் சந்தியில் ஒரு கோயில் அமைத்து அதற்கு

VOLUME: 1
ISSUE: 1
ISSN: xxxx-xxxx
Jul - Sep 2018

‘சந்திமரிச்சம்மன்’ என்றும் வடமேல் திசையில் கோயில் அமைத்து அதற்கு ‘முப்பிடாதி அம்மன்’ என்றும் பெயரிட்டு வணங்கினர்.

“சந்திமரிச்சம்மன் மூத்தவள் என்றும்
முப்பிடாதி அம்மன் இரண்டாவ தென்றும்
முத்துமாரி யென்றும் மாரி யென்றும்
அக்கினிமாரி யென்றும் சந்தனமாரி யென்றும்
காளியம்மன் என்றும் பத்ரகாளி யென்றும்”

காரணப்பெயர் வைத்து எட்டு அம்மன் தெய்வங்களையும் ஊர்மக்கள் இன்றும் வணங்கி வருவதை செல்லையா தேவரின் பேட்டியின் மூலம் அறிய முடிகிறது.

**மாரியம்மன் கோயிலின் சிலை தலவரலாறு:**

முப்பிடாதி அம்மன் கோயில் பூசாரியின் அருள்வாக்கின்படி கிராமத்தை நிர்வாகம் செய்து வந்த நாயுடு இனத்தவர் மாரியம்மன் கோயிலில் இருந்த இசக்கியம்மன் சிலையை வெளியேற்றினார். அச்சமயம் சப்பாணி பெருமாள் நாயுடு அவர்களின் கனவில் மாரியம்மன் வந்தது, அம்மன், ‘எனக்கு சிலை அடிக்க வேண்டியது நீதான். ஸ்ரீவைகுண்டம் செல். கல்வேலை செய்யும் ஆசாரி தெற்கும் வடக்குமான பஜாரில் தெற்கிலிருந்து வடக்காக உன் பேரைச் சொல்லி விசாரித்து வருவான். நான்தான் சப்பாணி பெருமாள் நாயுடுன்னு சொல்லு. கொத்தாளியான்னு கேட்பான். அதுக்கும் சரின்னு சொல்லு. கொத்தாளி மாரியம்மனுக்கு சிலை வடிக்க என்னிடம் சொல்லி இருக்காங்க. அட்வான்ஸ் கொடுன்னு கேட்பான். நீயும் கொடுத்துவிடு” என்று நாயுடுவின் கனவில் கூறியது. கனவின்படியே நாயுடுவும் சிலை செய்து முடித்து சிலையை கோயிலில் நிறுத்தினார். இது ‘சக்தியை நிறுத்தல்’ என்றழைக்கப்படுகிறது. அம்மனுக்குப் பூசைகள் நடத்தி குடமுழுக்கும் நடத்தினர். கோயில் மண் கட்டிடத்தாலும் மேற்பகுதி கூரையாலும் அமைக்கப்பட்டிருந்தது.

**மாரியம்மன் கோயில் தலவரலாறு:**

தென்னாட்டில் நாட்டுக் கோட்டைச் செட்டியார் என்பவர் அதிகச் செல்வாக்குடன் வாழ்ந்து வந்தார். இவரது தொழில் செட்டித் தொழிலாகும். இவரது பணியாட்கள் எல்லா ஊர்களிலும் காணப்பட்டனர். தயார் செய்த சமையற் பொருட்களை மாட்டு வண்டியில் ஏற்றிக் கிராமங்கள் தோறும் தனது பணியாட்கள் மூலம் வியாபாரம் செய்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

தனது வியாபாரத்தைக் கண்காணிப்பதற்காக சில பணியாட்களுடன் ஒருமுறை கொத்தாளிக்கு வந்தார். வியாபார நிமித்தமாக வெளிநாடு சென்ற தமது கப்பல் ஏழு நாளாகியும் கரைக்கு வரவில்லை என்று அவரது பணியாட்கள் கொத்தாளிக்கு வந்து அவரிடம் தகவல் சொன்னார்கள். கொத்தாளியில் உள்ள மாரியம்மன் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம் என்பதை அறிந்து மாரியைத் தரிசனம் செய்துவிட்டுப் புறப்பட்டார். சென்னையிலுள்ள கப்பல் துறைக்கு வந்தார். கப்பல் கறைவந்து சேரவில்லை. மாரியம்மனை மனதில் நினைத்து 'தன் கப்பல் கரை வந்தடைந்தால் அம்மனுக்கு கல்மாளிகை கட்டுவேன்' என எண்ணினார். ஓரிரு மணித்துளியில் கப்பல் கரை வந்தடைந்தது. அம்மனுக்கு வாக்குச் கொடுத்தபடியே கொத்தாளியில் கல்மாளிகை கட்டினார். இக்கோயில் கருவறையில் மாரியம்மனும், முத்துமாரியம்மனும் வடக்கு முகமாகக் காட்சி தருகிறார்கள். காளியம்மனும் மாரியம்மனும் அருகருகே அமைந்து ஒரே கோட்டைக்குள் வடக்கு முகமாக அமைந்திருக்கிறது. முத்துச்சாமி நாயுடும் அவரது மனைவி கண்ணம்மாள் என்பவரும் சேர்ந்து இரு கோயிலையும் (மாரி, காளி) இணைத்து ஒரே மண்டபமாகக் கட்டினார்கள்.

**விழா மற்றும் விழா நிகழ்ச்சிகள்:**

மாரியம்மன், காளியம்மன் கோயில்களில் சித்திரைத் திங்கள் மூன்றாம் செவ்வாய் திருவிழா நடைபெறுகிறது. இங்கு யோகிஸ்வரர் இனத்தவர் பூசாரியாக இருக்கிறார். நாள் குறித்தல், காப்புகட்டுதல், வரிபோடுதல், நோன்பு மேற்கொள்ளல், திருவிழாவிற்கு வேண்டிய மேளம், வில்லு, கணியான், கும்மி, பாட்டுக்கச்சேரி. பந்தல்காரர், ஓதுவார். அன்னதானத்திற்குத் தேவையான காய்கறி, மசாலா சாமான்கள், பூக்கள் போன்றவைகளுக்கு முன்பணம் கொடுத்தல், குடியழைப்பு, போன்ற நிகழ்ச்சியில் மற்ற அம்மன் கோயிலில் நடைபெறுவது போன்று இங்கும் நடைபெறுகிறது.

**கரகநீர் எடுத்தல்:**

மாரியம்மன், காளியம்மன் கோயிலில் கரகநீர் எடுப்பது மிகச் சிறப்பான ஒன்றாகும். இக்கோயிலில் நாளுக்கு இரண்டு கரகமாக வெள்ளிக் கிழமைகளிலிருந்து செவ்வாய் கிழமை வரை பத்து கரகம் எடுக்கப்பயன்படுகிறது. சுடாத மண்ணால் ஆன பச்சைக் கலயமே கரகம் எடுக்கப்படுகிறது. இது இவ்விழாவின் சிறப்பாகும். கலயத்துக்குள் நீருற்றி வேப்பிலை காப்பைக் கலயத்தின் மேல் வைக்கின்றனர். தினமும் மாலை 4 மணிக்கும், இரவு 10 மணிக்கும் கரகம் ஊர் சுற்றி வலம் வருகிறது. "கரகம் வைத்திருப்போர் நெற்றியில் வெள்ளப் பட்டயம் கட்டி ருத்ராட்ச மாலையணிந்து, இடுப்பில் பாவாடை கட்டி இருப்பர்" என்று பேட்டியாளர் பார்வதி

கூறுவதன் மூலம் அறிய முடிகிறது. அம்மனுக்குப் பூசை நடக்கும் பொழுது கரகமெடுப்பவர்களுக்கு அருள் வருகிறது. அருள் வந்ததும் பூசாரி கரகத்தைக் கரகமெடுப்பவரின் தலையில் தூக்கி வைக்கிறார். கரகத்தை அம்மனாகவே நினைத்து ஊர் மக்கள் தேங்காய் பழம் உடைக்கின்றனர். வீடு தோறும் கரகமெடுப்பவரின் காலைக் கழுவி சந்தனப் பொட்டிட்டு, குங்குமம் வைக்கிறார்கள். இவ்வாறு மேள தாளத்துடன் கரகம் ஊர் சுற்றி வலம் வருகிறது. மாரியம்மன் கோயிலில் முத்துமாரியும், மாரியும் உள்ளனர். காளியம்மன் கோயிலில் அக்கினி மாரியும், காளியும் உள்ளனர். ஊர் மக்கள் மண் கும்பம் என்றும், அக்கினிக் கும்பம் என்றும் கரகத்தை அழைக்கின்றனர். மூன்றாம் நாளில் மட்டும் அக்கினிக் கும்பம் ஊர் சுற்றி வலம் வருகிறது. இதற்கு மண் கலயத்தில் பருத்தி விதையும், சிறிது மண்ணும் பரப்பி ஒரு நீளத் திரியை உள் வைத்து, நெய்யூற்றி கும்பத்தை ஏற்றுகின்றனர். இம்மாதிரியான கரகநீர் எடுத்தல், அக்கினிக் கரகமெடுத்தல் கொத்தாளியில் மிகவும் அதிசயமாக வேறெங்கும் இல்லாத வழிபாடுகளில் ஒன்றாக உள்ளது.

"உனக்குப் பத்துக் கரகமம்மா பதிந்தாடும் பொற்கரகம்

வேப்பிலையும் பொற்கரகம் வீதி விளையாடி வர"

என்று வில்லுப்பாடகர் சங்கரசுவாமி கரகத்தையும், வீதிவலம் வரும் தன்மையினையும் தமது வில்லுப்பாடலில் பாடுகிறார். கரகம் இறங்கியதும், அந்நீரால் அம்மனை நீராட்டி, அலங்காரம் செய்து இரவில் சிறு மறியை அறுத்துப் படையலிட்டு வழிபாடு செய்வர். இதற்கு 'சாமப் படைப்பு' என்று பெயர். பின்னர் பொங்கல் வைக்கப்படுகிறது. இதனை 'அம்மன் பொங்கல்' என்பர். கரகம் இரவு ஊர் சுற்றி வலம் வந்த பிறகே அம்மன் கோயிலுக்குள் எழுந்தருளுவாள். அம்மன் முன் பொங்கலைப் படைக்கின்றனர்.

**<u>நேர்த்திக்கடன்கள்:</u>**

பொங்கல் வைத்தல், மாவிளக்கு எடுத்தல், பட்டு சார்த்துதல், ஆயிரங்கண் பானை எடுத்தல், பால்குடம் எடுத்தல், முளைப்பாரி எடுத்தல், முடி இறக்குதல், காணிக்கை செலுத்துதல் போன்ற நேர்த்திக் கடனை நேமிக்கமுள்ளவர்கள் செய்கின்றனர்.

**நம்பிக்கைகள்:**

நாட்டில் மழை பெய்து நாடு செழிக்க மாரியின் அருள் வெண்டும் என்றும், அம்மை முதலிய நோய்களுக்கு மாரிதான் காரணம் என்றும் அதனை நீக்குவது மாரிதான் என்று மக்கள் நம்புகின்றனா்.

“ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆவாது

மாரி கடன் தீா்த்தாா்க்கு மனக்கவலை தீருமம்மா”

என்று மாரிக்குரிய நோ்த்திக்கடன் செலுத்தாவிட்டால் மாரி சினம் அடைவாள் என்று பேட்டியாளா் அலங்காரி கூறுவதன் மூலம் அறிய முடிகிறது. மாரியை நீராகவும், காளியை அக்கினித் தெய்வமாகவும் எண்ணி மக்கள் வழிபடுகின்றனா். பொட்டுத்தாலி செய்து வைத்தால் கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடந்துவிடும் என்ற நம்பிக்கையும் உள்ளது. முளைப்பாரி நன்கு செழித்து வளருமாயின் அவ்வாண்டு அவா்களுக்கு விளைச்சல் சிறந்து செழிக்கும் என்று இம்மக்கள் நம்புகின்றனா்.

**முடிவுரை:**

கொத்தாளியில் பல தெய்வங்கள் காணப்பட்டாலும் மாரி, காளி கோயில்கள் மட்டும் அனைவரும் வழிபடும் பொதுக்கோயிலாக அமைந்துள்ளன. இதன் மூலம் பெருந்தெய்வ நிலைக்கு மாரியும், காளியும் உயா்ந்து வருவதை அறிய முடிகிறது. நீா்க்கரகம் மாரிக்கும், அக்கினிக் கரகம் காளிக்கும் நடத்தப்படுகிறது. முளைப்பாரி எடுத்தல், கரகம் எடுத்தல் போன்ற வளமைச் சடங்குகளையும், பல நோ்த்திக்கடனையும் இம்மக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் செய்வதை அறிய முடிகிறது. மண் கூரையாய் இருந்த கோயிலை காரைக் கட்டடங்களாக மாற்றி மாரியையும், காளியையும் அவரவா் பொருளாதார நிலையின்படி வழிபட்டு வருகின்றதை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது.